இறைவொளி வெளியீடு வழங்கும்

# இயேசுவின் பாதையில் நாம்

# YESUVIN PAATHAIYIL NAAM

## (சிலுவைப்பாதை)

## WAY OF THE CROSS

Written By: Rev.J.Arokianathan
Bangalore Archdiocese, India

ஆக்கம்

**அருள்தந்தை ஜெ.ஆரோக்கியநாதன்**

பெங்களுர் உயர்மறைமாவட்டம்

பெப்ருவரி 2012

கிடைக்குமிடங்கள்: பெங்களுர் உயர்மறைமாவட்ட திருத்தலங்களில், முக்கிய கிறிஸ்தவ வணிகக் கூடங்களில் மற்றும் தமிழகத் திருத்தலங்களில்

தொடர்புக்கு: தூய பேதுரு ஆலயம், மணிப்பால் மருத்துவமனை பின்னால், ருஸ்தும்பாக், பழைய விமானத்தளச் சாலை, பெங்களுரு – 560017 இந்தியா

கைபேசி: 09740203056 மின்னஞ்சல்: nathanvatican@yahoo.com

## என்னுரை

என் உயிரினும் மேலான தமிழ்க் கிறிஸ்துவ பெருமக்களே, நான் கடந்து வந்த பாதையில் எத்தனையோ கனவுகளையும் ஏக்கங்களையும் ஏமாற்றங்களையும் உயர்வுகளையும் தாழ்வுகளையும் சுமந்து வந்திருக்கின்றேன். அவை அத்தனையுமே எனக்கு ஏதாவது ஒரு பாடத்தையோ ஆசீரையோ தந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் என் தலைவர் அருள்நாதர் இயேசுவின் சிலுவைப்பாதையோடு பிணைத்துக்கொண்டு அவரோடு நடந்து வந்திருக்கிறேன். இதற்காக அவருக்கும் எனக்கும் உதவிய எண்ணற்ற உள்ளங்களுக்கும் இவ்வேட்டினை படித்துத் தியானிக்க இருக்கும் உங்களுக்கும் என் நெஞ்சார நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்து நான் நேசிக்கிற என் தாய்த் தமிழ் மொழியில், என் எண்ணக் குமுறல்களை உரிமைக்குரல்களை நம் ஆண்டவருடைய வாழ்வின் உச்சக்கட்ட அனுபவச் சிதறல்களை சிறிதளவு இவ்வேட்டினில் பதித்துள்ளேன் என்பதனை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

உறவுதான் வாழ்க்கை. உறவின்றி உயிரேது உயிரின்றி உலகமேது, உலகமின்றி நீங்கள் ஏது நான் ஏது? ஆக உறவுக்கும் உயிருக்கும் ஆணிவேராய் இருப்பவர் அருள்நாதர் இயேசு. இவர் இவ்வுலக வாழ்வில் இறைதந்தை தமக்குப் பணித்த பணிகளில் சந்தித்த நிகழ்வுகளின் உச்சக்கட்டமாகத் திகழும் சிலுவைப்பாதை நம்மெல்லோரின் கண்களையும் ஈரமாக்கிவிடுகின்றன. நம் வாழ்வையே மாற்றிவிடுகின்றன. அடிப்படையில் நம் எண்ணங்களையும் உணர்வுகளையும் சீர்தூக்கிப் பார்க்கப் பெரிதும் உதவுகின்றன.

இந்நூலைப் படித்து, தியானித்து அருள்நாதரின் புனிதப் பாதையில் நீங்கள் நடக்கும்போது ஒரு சில கண்ணீர்த் துளிகளையாவது சிந்துங்கள். ‘எருசலேம் பெண்களே, எனக்காக அழாதீர்கள், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்’ என்ற அருள்நாதரின் அறிவுரையை ஏற்று, உங்களை பெரிதும் பாதித்தப் பாதக மற்றும் பாவச்செயல்களுக்காக கண்ணீர் சிந்தி, உள்ளும் புறமும் உருமாற்றம் பெருங்கள். அதற்கு இந்நூல் உதவும் என்ற நம்பிக்கையுடன்

உங்கள் அன்பில் ஆதரவில்

**அருள்தந்தை ஜெ.ஆரோக்கியநாதன்**
பெங்களூர் உயர்மறைமாவட்டம்.
முன்னாள் வத்திக்கான் வானொலி தமிழ் நிகழ்ச்சி ஒலிபரப்பாளர (உரோம்)
இந்தியா
2012 பெப்ருவரி
மின்னஞ்சல்: **nathanvatican@yahoo.com**
கைபேசி: 09740203056

பழிகளை சுமத்தி பரிகசித்தார் உயிர் பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்
பழிகளை சுமத்தி பரிகசித்தார் எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

**முதல் நிலை**



**இயேசுவுக்கு மரண சாசணம்**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

நிரபராதிகள் தண்டிக்கப்படுவதும் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிப்பதும் உலக நடப்புகள். அப்படித்தான் மாசில்லா இயேசு ஒரு கொடிய குற்றவாளியைப் போல் பிலாத்துவினால் சாவுக்குக் கையளிக்கப்படுகிறார்.

அவர் தண்டிக்கப்பட்டது நீதிக்குப் புறம்பானது என்றாலும் இதுவே இறைதந்தையின் திட்டமாக நோக்கப்படுகிறது. எந்த நிரபராதியும் தண்டிக்கப்படக்கூடாது என்பதும் அப்பாவிகள் காப்பாற்றப்படவேண்டும் என்பதும் அதற்காகவே முதலும் இறுதியுமாக தம் மகனை கொடிய குற்றவாளியைப் போல் கொலைகளத்திற்கு அனுப்பினார் இறைவன் எனறே நாம் புரிந்துகொள்ளவேண்டும். அதற்காகவே கடவுள் தம் மகனை கல்வாரி பலிக்கு ஒப்புக்கொடுக்கத் திருவுளங்கொண்டார்.

நாமும் நம் அன்றாட நடப்புகளில் எவரையும் அநியாயத் தீர்ப்புக்கு ஆளாக்காமல் அறவழியில் இறைவழியில் செல்ல முயல்வோம். நாம் வாழ நாம் மீட்படைய நாம் புதுவிடியல் காண சிலுவைச் சாவு தீர்ப்பை ஏற்றுக்கொண்ட ஆண்டவருக்கு நன்றி கூறி மனம் மாறுவோம் கடவுளின் பிரதிநிதிகளாகிய குருக்களிடம் பாவ அறிக்கைப் புரிவோம்.

**செபம்**: எங்களுக்காகச் சிலுவைச் சாவு தீர்ப்பினை ஏற்றுக்கொண்ட இயேசுவே வரவிருக்கும் நாட்களில் நாங்கள் எவரையும் அநியாயத் தீர்ப்புக்கு ஆளாக்காமல் அன்புடன் நடத்த அருள்புரியும் ஆமென்.

***எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2***

***மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.***

0000000000000000

தாளாச் சிலுவை சுமக்க வைத்தார் - உமை மாளாத் துயரில் துடிக்க வைத்தார், எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

## 2ம் நிலை



## இயேசுவின் சிலுவைப் பயணத்தின் தொடக்கம்

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

''என்னைப் பின்செல்ல விரும்புகிறவர் தன் சிலுவையை சுமந்துகொண்டு என் பின்னே வரட்டும்'' என்று மற்றவர்க்குக் கூறிய இயேசு தம்மீது சுமத்தப்பட்டச் சிலுவையை சுமந்துகொள்கிறார். சிலுவையை சுமப்பது என்பது சீடத்துவத்தின் கட்டாயம் என்பதை சுட்டிக்காட்டிய இயேசு தாமே வரைந்துகொண்ட கோட்டினை தாண்டாமல் தமக்கு நேரிட்ட துன்பங்களை சுமப்பதிலே பெருமகிழ்ச்சிக் கொள்கிறார். சட்டத்தைத் தீட்டுகிறவர்கள் அச்சட்டத்தினை மீறிவிடும் இவ்வுலகில் தமக்குச் சீடராய் இருக்க விரும்பும் எவரும் அவரவர் சிலுவைகளைச் சுமந்துகொண்டு தம்மைப் பின்தொடரவேண்டுமென்பதற்காகவே தாம் உருவாக்கிய நியமத்தைத் தாமே கடைபிடிக்கிறார். தமக்கு நிகர் தாமே என்பதை ஆண்டவர் நிரூபிக்கிறார். தாம் போதித்த போதனைக்குத் தாமே முதல் சீடராக விளங்குகிறார் என்றால் மிகையல்ல.

இவ்வாறு மற்றவர் பால் கொண்ட பாசத்தினாலும் மனித மீட்பின் மீது கொண்ட அளப்பரிய அக்கறையினாலும் இயேசு சிலுவையைச் சுமக்கிறார். ''சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள், உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்றவர் நம் பாவச்சுமைகளை இறக்கிவிடும் நோக்கில் அவற்றை தம் மீது சுமத்திக்கொள்கிறார். ஆம், இயேசு ஒரு சுமைதாங்கி! இன்று நாம் பிறருடைய நல்வாழ்வுக்காக மகிழ்ச்சிக்காக அமைதிக்காக முடிந்தவரை ஒரு சுமைதாங்கியாக மாறுவோம்.

**செபம்**: ஆன்மீக ஒழுக்கத்தை ஓர் அளவுக்கோளாகத் தீட்டிய இயேசுவே, எங்கள் அன்றாடச் சிலுவைகளை மனதாழ்ச்சியுடன் சுமந்துகொள்ளும் விசுவாசத்தைத் தந்தருளும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2 மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

விழுந்தீர் சிலுவையின் பளுவோடு – மீண்டும் எழுந்தீர் துயர்களின் நினைவோடு
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக** – 2

**3ம் நிலை**



**இயேசுவின் சிலுவைப்பாதையில் முதல் சறுக்கல்**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

இயேசு ஆண்டவர் தமது இலட்சியப்பாதையில் முதல்முறையாக கீழே விழுகிறார். நம்மைபோன்ற மனிதர்கள் தோல்விகளை சந்திப்பது இயல்பானது. ஆனால் இயேசு, இறைமகன், விண்ணகத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கும் மெசியா, தமது மீட்புப் பணியில் கீழே விழலாமா? அது அவரின் தோல்விக்கு வழிவகுத்துவிடாதா? இப்படி கேட்கத்தோன்றும். ஆனால் அவரும் நம்மைப் போலவே ஒரு மனிதராக, சறுக்கல்கள் மற்றும் தோல்விகளை எதிர்கொள்ளவேண்டும் என்பதற்காகக் கீழே சாய்கிறார்.

சறுக்கல் இடறல் வீழ்ச்சி ஆகியவை இல்லாமல் ஒருவர் வாழ்க்கை இலட்சியத்தின் வெற்றிக்கனியை சுவைக்க இயலாது. அப்படியே சுவைத்தாலும் அது நீடிக்காது. எனவேதான் மெசியாவேயானாலும் விண்மகிமையை பெறுவதற்காக மண்வாழ்க்கையில் வீழ்ந்துதான் ஆகவேண்டும் என்பதை உணர்த்த இயேசு தரையில் குப்புற வீழ்ந்து மீண்டும் எழுந்து, கல்வாரிப் பயணத்தைத் தொடருகிறார்.

நம்மை குற்றவுணர்வுகள், தீய நாட்டங்களினால் விளைந்த எதிர்விளைவுகள், பகுத்தறியாத உறவுகளினால் ஏற்பட்ட முறிவுகள், குடும்பத் தகறாறுகள், பண ஆசையினால் முளைத்த விருட்சங்கள் போன்றவை தடம்புரளச் செய்திருக்கலாம். ஆனால் இயேசு ஆண்டவர் இவற்றையெல்லாம் வெற்றிக்கொண்டுவிட்டார்.

**செபம்:** இறையேசுவே, வேண்டாமென்றாலும் நிழல்போல் எங்களைத் துரத்தும் வீழ்ச்சிகளை கண்டு அச்சமுறாமல் உம் சிலுவையின் அடியில் நிற்க தயைபுரியும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

தாங்கிட வொண்ணா துயருற்றே – உம்மைத் தாங்கிய அன்னை துயருற்றாள்
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

**4ம் நிலை**



www.shutterstock.com · 52352383

**இயேசு தம் அன்புத் தாய் மரியாளைச் சந்திக்கிறார்**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

"யார் என் தாய் யார் என் சகோதரர் யார் என் சகோதரி, என் தந்தையின் திட்டத்தின்படி வாழ்கின்றாரோ அவரே என் தாயும் சகோதரரும்" என்று கூறிய இயேசு தமது பயணத்தின்போது தமது தாயை சந்திக்கிறார். இங்கே தாயும் சேயும் பாசவுணர்வுகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். எனினும் தம் தாயின்மீது கொண்ட பாசத்தைவிட மாந்தர்கள்மீது கொண்ட அக்கறையே மேலானது என்று உணர்ந்திருந்தார் இயேசு. எனவேதான் தம் பகைவர்களால் சிறைபிடிக்கப்பட்டபோதும் தாயின் ஆதரவை நாடவில்லை. மாறாக, கடமையை, இலட்சியத்தை முன்வைத்து கல்வாரியை முன்னோக்கி நடந்தார். அதற்கேற்றவாறு, அன்னை மரியாளும் தம் மகனின் இறைபணியில் குறுக்கிடாமல் உற்சாகம் தந்து இறுதிவரை போராடி வெற்றிக்கொள் மகனே என்று வெற்றித்திலகமிட்டு கல்வாரி நோக்கி அனுப்பிவைக்கிறார்.

அன்புச் சகோதரியே, நீங்கள் ஒரு தாயாக இருந்தால் உங்கள் பிள்ளைகளை ஒழுக்கத்தில் வளர்த்து அவர்களைச் சான்றோர்களாக வார்த்தெடுங்கள். நாளைய உலகில் கிறிஸ்துவின் சாட்சிகளாக பொறுப்புள்ள கிறிஸ்தவ சமுதாயத்தின் விழுதுகளாக மாற்றுங்கள். உங்களால் பிள்ளைகளுக்கும் உங்கள் பிள்ளைகளால் உங்களுக்கும் சிறப்பும் மதிப்பும் பெருகட்டும்.

**செபம்**: இனிய ஆண்டவரே, உமது தாய் மரியாளைப்போன்று ஒவ்வொரு கிறிஸ்தவ பெண்மணியும் வாழும் ஆற்றலைத்தாரும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

0000000000000000000000

மறுத்திட முடியா நிலையாலே – சீமோன் வருத்தினார் தன்னை உம்மோடு
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

**5ம் நிலை**



**மீட்புப் பணியில் மெசியா பெற்ற உதவி**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

சீமோன் என்பவன் ஓர் உழவன். வயலிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த அவன் ஒரு மரண குற்றவாளியாகச் சிலுவையை சுமந்துகொண்டுவந்த இயேசுவை பரிதாபத்தோடு வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தான். இதோ சற்றும் எதிர்பாராத நேரத்தில் அவனை இழுத்துவந்து சாவின் விளிம்பிற்கே வந்துவிட்ட மெசியாவுக்கு உதவி புரியுமாறு வற்புறுத்தினார்கள் கயவர்கள். சிறிது தூரம் இயேசுவின் சிலுவையைச் சுமந்தான் சீமோன். இம்மண்ணில் அவன் புரிந்த இவ்வுதவிக்குக் கைம்மாறாக விண்ணில் அவனுக்குக் நிறைவாழ்வை வழங்கியிருப்பார் இயேசு பெருமான்.

காலத்தினால் செய்தவுதவி சிறிதே எனினும் ஞாலத்தின் மானப்பெரிது என்பது வள்ளுவம் காட்டும் படிப்பினை. பெறுவதைவிட கொடுப்பதில் தான் அலாதி இன்பம் உண்டு என்றார் புனித பவுலடியார். உப்பிட்டவரை உள்ளளவு நினை என்கிறது நம் தமிழ்ப் பண்பாடு. சின்னஞ்சிறியவருள் நீங்கள் எதைச் செய்தாலும் அதை எனக்கே செய்கிறீர்கள் என்றார் இயேசு. எனவே நமக்கும் பிறருக்கும் நல்லது எதுவோ அதை இன்றே செய்வோம்.

**செபம்:** ஆபத்து காலத்தில் என்னைக் கூப்பிடு நான் அங்கேயிருப்பேன் என்றுரைத்த இறைவா, எங்கள் உடன்பிறந்த சகோதர சகோதரிகளுக்கு மட்டுமல்லாமல் அனைவரையும் நேசிக்கும் பரந்த உள்ளத்தை எங்களுக்குத் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

நிலையாயப் பதிந்தது உம் வதனம் - அன்பின் விலையாய் மாதின் சிறுதுணியில்
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக** – 2

**6ம் நிலை**



**வெரோணிக்கா என்ற மாது இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள்**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

பெண்ணடிமை என்பது இசுராயேல் சமுதாயத்தில் ஊன்றிப்போயிருந்தக் காலம் அது. ஆண்கள் மட்டுமே கோலோச்சிய அக்காலத்திலேயே பெண்ணுரிமையை அச்சமின்றி வெளிப்படுத்தி மரணதண்டனைக்குட்பட்ட ஓர் ஆடவனின் முகத்தைத் துடைக்கவேண்டுமாயின் வெரோணிக்காவுக்கு அசாத்திய, அசூர உள்ளம் இருந்திருக்கவேண்டும். ஆக நெஞ்சுறுதிகொண்ட பெண்களில் வெரோணிக்கா தனித்து நிற்கிறாள். இதோ அவள் துடைத்தத் துணியில் தம் திருமுகத்தின் சாயலைப் பதித்துவிட்டார் ஆண்டவர்.

நம் குடும்பத்துத் தாய்மார்கள் மற்றும் இளம்பெண்கள், ஒருவருடைய துன்பத்தைக் கண்டு வேடிக்கைப் பார்த்துக்கொண்டிராமல், கணவன் குடிபழக்கத்திற்கு ஆளாகியிருந்தால் பிள்ளைகள் பக்தியும் விசுவாசமும் அற்றிருந்தால் அவர்களைச் சரியானப் பாதையில் வழிநடத்தும் வீரமிக்க பெண்களாக உயர்ந்திடுமாறு அதே நம் ஆண்டவரை நோக்கி வேண்டுவோம்.

**செபம்:** அனாதைகளையும் விதவைகளையும் பாவிகளையும் நேசிக்கும் மீட்பராம் இயேசுவே, உம் திருமுகத்தைத் துடைத்த வெரோணிக்காபோல் உறுதியான நெஞ்சம் உடையவர்களாக நாங்கள் வாழும் அருள்தாரும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததினால் - அந்தோ சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

**7ம் நிலை**



**இயேசுவின் இலட்சியப்பாதையில் 2வது சறுக்கல்**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

விடுதலை நோக்கிய தம் சிலுவைப்பாதையில் சறுக்கல் இடறல் சோதனை தடுமாற்றம் என எதுவந்தாலும் எவ்வித தடையுமின்றி இலக்கை அடைந்துவிடவேண்டும் என்ற பிடிவாதம் இருந்தபோதிலும் மனிதவுடலின் பலவீனத்தாலும் பதட்டம் கொண்ட மனதாலும் இரண்டாவது முறையாகக் கீழே விழுகிறார் இயேசு. தட்டுத்தடுமாறி மீண்டும் எழுந்து தம் பயணத்தைத் தொடருகிறார்.

நம் பாவத்திற்கும் இறையருளுக்கும் நுழைவாயில்களாக இருப்பன நம் ஐம்புலன்கள். இந்த ஐம்புலன்களையும் நாம் எப்போது கட்டுப்படுத்தி இறைவனை நோக்கிச் செலுத்துகிறோமோ அப்பொழுது நம் தோல்விகளையும் வெற்றிக்கொள்வோம். இதற்கு நமக்கு உறுதுணையாக இருப்பவை நற்கருணை, பாவஅறிக்கை போன்ற அருள்சாதனங்கள். எனவே இத்தவக்காலத்தில் பக்தியுடன் நற்கருணையை உட்கொண்டு, குருவானவரிடம் பாவசங்கீர்த்தனம் செய்து புனிதமடைவோம். மேலும் விவிலிய வாசகம், செபமாலை, புனிதர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களை படித்தல் ஆகியன மூலமாகவும் நமது கிறிஸ்துவ சாட்சிய வாழ்வுக்கெதிராக வரும் சவால்களை எதிர்கொள்வோம். இடறிவிழுந்தாலும் எழுவோம்.

**செபம்**: இறைவா, தோல்வியை கண்டு துவளாத, சோர்வடையாத எண்ணமும் உடலின் உற்சாகமும் உம் திருவுளத்தை நிறைவேற்றவேண்டிய ஆசீர்வாதங்கள். இவற்றை எங்களுக்கு மிகுதியாகத் தந்தருளும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

விழிநீர் பெருக்கிய மகளிருக்கு – அன்பு மொழி நீர் நல்கி வழி தொடர்ந்தீர்
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

**8ம் நிலை**



**எருசலேம் மகளிருடன் இயேசுவின் சந்திப்பு - தற்காலிக ஆறுதல்**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

தம்முடைன் இருந்தவர்கள் அனைவரும் கைவிட்ட பரிதாப நிலையில் தனிமரமாய் நின்றவருக்கு எருசலேம் பெண்கள் ஆறுதல் சொல்ல முன்வருகின்றார்கள். இயேசு அவர்களை நோக்கி, “ எருசலேம் பெண்களே, எனக்காக அழாதீர்கள், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள், பச்சை மரத்திற்கே இந்த நிர்பந்தம் என்றால் பட்டமரத்திற்கு என்ன நேருமோ” என்று ஆறுதலும் அறிவுரையும் கூறுகிறார். இயேசுவின் இப்போதனை எல்லா தலைமுறையினருக்கும் பொருந்தும்.

பணமும் புகழும் செல்வமும் செல்வாக்கும் இருக்கும்போது நம்மை சுற்றி ஒரு பட்டாளமே வட்டமிட்டுக்கொண்டிருக்கும். ஆனால் இவ்வுலகச் செல்வங்கள் நம்மை கைவிட்டுப்போய்விட்டால் கரம்பிடித்து ஆறுதல் சொல்லவோ ஆதரவு காட்டவோ ஒருவரும் இருக்கமாட்டார். ஆனால் உறவு எங்குள்ளதோ அங்கே உரிமையும் உண்டு. எனவே நம்முடைய உறவுகளை புதுப்பித்துக்கொண்டு புதுவாழ்வை நோக்கி இயேசுவோடு நடப்போம்.

**செபம்**: ஆண்டவரே, துன்பம் வரும் வேளையில் ஆறுதல் தேடி யார் யாரிடமோ எதை எதையோ நாடி செல்கிறோம். ஆனால் உண்மையான ஆறுதலும் அரணும் நீர் என்பதை மறந்துவிடுகிறோம். எனவே ஆண்டவரே, எங்கள் விசுவாசத்தை அதிகரியும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

மூன்றாம் முறையாய் நீர் வீழ்ந்தீர் - கால் ஊன்றி நடந்திடும் நிலை தளர்ந்தீர்
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

**9ம் நிலை**



**இயேசுவின் மூன்றாவது சறுக்கல்**

இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகின்றார். மீண்டும் எழுகின்றார். ஏனென்றால் இறைதந்தை தமக்குத் தந்த மீட்புப் பணியை மட்டுமே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இயேசு தாம் தேர்ந்துகொண்ட இறையழைத்தலுக்கேற்ற வாழ்க்கை வாழ்ந்ததினால், சறுக்கல்கள் மற்றும் தோல்விகளைக் கண்டு மனம் தளரவில்லை.

நமது திருமுழுக்கின்போது சாத்தானை விட்டுவிடுகிறீர்களா என்று குருவானவர் வினவுகிறபோது விட்டுவிடுகிறேன் என்று பதிலளிக்கிறோம். திருமண அருள்சாதனத்தின்போது, மணமக்கள் இருவரும் ''இன்பத்திலும் துன்பத்திலும் உடல்நலத்திலும் நோயிலும் உங்களை என் கணவராக உன்னை என் மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன்'' என்று வாக்குறுதி தருகின்றனர். .ஆனால் பணத்திற்கும் உடலிச்சைகளுக்கும் நவீன பொருட்களை நுகர்வதற்கான ஆசைகளுக்கும் இரையாகிவிடுகிறோம். இதனால் பல சமயங்களில் இறைவனை விட்டுவிட்டு சாத்தானை பற்றிக்கொள்கின்றனர். வாழ்க்கையில் இடறிவிழுகின்றனர். எனினும் ''நீதிமான் ஏழுமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பர்'' என்று **நீதிமொழிகள்** புத்தகம் 24:16 சொல்கிறது.


இவ்வாறாக, மனஅமைதி, பொறுமை, இறைவிசுவாசம், பகிர்தல், மன்னிப்பு, கடுமையான உழைப்பு, உணர்ச்சிகளை கட்டுப்படுத்துதல், மனந்தளரா செபம் மற்றும் உண்ணாநோன்பு போன்றவற்றால் நாம் மீண்டும் எழுந்து நமது கிறிஸ்தவ வாழ்வில் சிறந்து விளங்குவோம்.

**செபம்:** உள்ளமோ உறுதியானது உடலோ பலவீனமுள்ளது என்று மொழிந்த இயேசுவே, எல்லா தடைகளையும் கடந்து உமது இலட்சியத்தில் வெற்றிக்கண்டதுபோல நாங்களும் எங்கள் சோதனைகளை வெல்லும் வரம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

உடைகளைக் களைந்திட உமை தந்தீர் - இரத்த மடைகள் திறந்திட மெய் நொந்தீர்
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

**10ம் நிலை**



**இயேசுவுக்கு ஏற்பட்ட அவமானத்தின் உச்சகட்டம்**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

பாவமில்லா செம்மறியாகிய இயேசு இதோ கொலைக்களம் வந்துவிட்டார். இனி சற்று நிமிடத்தில் அவரைச் சிலுவையில் பலிகொடுக்கப்போகிறார்கள். அதன் தயாரிப்பாக கண்ணீரும் செந்நீரும் கலந்த அவருடைய மேலாடையைக் களைந்து, புண்ணாகிப்போன இறைமைந்தனின் பூமேனியை அவமதிக்கிறார்கள்.

மக்களுக்காக ஒருவன் மட்டும் இறப்பது நல்லது என்று தலைமைக் குருவாயிருந்த கயபா கூறியிருந்தான் (யோவான்.18:14). ஆம், இக்கூற்று நிறைவேறும்வண்ணம் இயேசுவை சிறைபிடித்தார்கள், சாட்டையால் அடித்தார்கள், அங்க அசைவுகளால் நொடித்தார்கள், காரி உமிழ்ந்தார்கள், எள்ளி நகையாடினார்கள், முள்முடி சூட்டி தலையை புண்படுத்தினார்கள், எட்டி உதைத்தார்கள், சிலுவையை சுமத்தினார்கள், "இவன் யூதரின் அரசனாம்" என பரிகசித்தார்கள். இவ்வாறு ஒரு மனிதரை எப்படியெல்லாம் அவமானப்படுத்தமுடியுமோ அப்படியெல்லாம் செய்த கயவர்கள், அவமானத்தின் உச்சக்கட்டமாக மானத்திற்கு பாதுகாப்பளிக்கும் ஆடையையும் களைந்து இயேசுவை மேலும் இரணப்படுத்தினார்கள் தீயஆவிக்குரியவர்கள்.


நாம் அனைவரும் இறைவனின் சாயலில் படைக்கப்பட்டவர்கள் என்கிறார் புனித இராயப்பர். எனினும் அடுத்தவரை எப்படியெல்லாம் இழிவுபடுத்தமுடியுமோ அப்படியெல்லாம் அவமதிக்கிறோம். பின்பு நல்லவர்களைப் போல இறைவழிபாட்டில் பங்கேற்கின்றோம். எனவே, நம்முடைய முரண்பாடான வாழ்க்கையிலிருந்து மனம் மாறும்போது மட்டுமே இந்தச் சிலுவைப்பாதை தியானம் நமக்கு நிறைவான பயனளிக்கும்.

**செபம்**: விழியாலும் கூட பிறரை அவமானப்படுத்தாத இயேசுவே, சாதி மதம் மொழி நிறம் பொருள்வளம் ஆகியனவற்றால் எவரையும் நாங்கள் துன்புறுத்தாத உள்ளம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

பொங்கிடும் உதரம் வடிந்திடவே – உம்மைத் தொங்கிடச் செய்தார் சிலுவையிலே
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

## 11ம் நிலை



### இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

அவமானத்தையெல்லாம் தாங்கிக்கொண்ட இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள். நம் கொடுமையான பாவங்களான ஒவ்வொரு கூர்மையான ஆணியும் இயேசுவின் திருமேனியை பதம் பார்க்கின்றது. இரத்தம் பீறிட்டு வெளியேறி கல்வாரி பீடத்தைத் தூய்மைபடுத்துகிறது. இன்னும் சற்றே நிமிடங்களில் இயேசு பெருமான் சிலுவையில் உயிர்த் தியாகம் செய்ய இருக்கிறார்.

இயேசுவின் சிலுவை உலக மாந்தரின் எல்லா பாவங்களையும் உள்வாங்கிக்கொண்டது. அதிலிருந்து மீட்பு என்னும் தூய மலர் மலரப்போகிறது. இவ்வாறு இயேசுவின் சிலுவை, தூயகத்தின் பெட்டகமாகவும் உயிரை வாங்கி உயிர் வழங்கும் நீதியில்லமாகவும் மாறிவிட்டது. இயேசுவின் சிலுவையை ஆராதிக்கும் நம் ஒவ்வொருவருடைய நிலைவாழ்வின் புனிதத் தளமாக உயர்ந்துவிட்டது. இனி வரவிருக்கும் நம் வாழ்வின் பாவச் செயல்கள் மற்றும் இன்ப துன்பங்களை இயேசுவின் சிலுவையோடு அறைந்துவிடுவோம். சிலுவையே, உம் மாட்சிமை என்றென்றும் வாழ்க!

**செபம்**: விண்ணகத்துக்கும் மண்ணகத்துக்கும் பாலமாக விளங்கும் இறையேசுவின் சிலுவையே, இனிவரும் காலங்களில் எங்கள் வாழ்வில் நாங்கள் சந்திக்கும் சிலுவைகளை மகிழ்வுடன் ஏந்திகொள்ளும் உற்சாகத்தைத் தந்தருளும்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

**பாடல்**: சிலுவையை நிமிர்ந்துப் பாராயோ அதன்புதுமையை கொஞ்சம் கேளாயோ **உலகமே**-4


பாவியை மன்னிக்கும் சிலுவை இது புது ஆவியை தந்திடும் சிலுவை இது
துன்பத்தைப் போக்கிடும் சிலுவையிது மன துயரத்தை நீக்கிடும் சிலுவையிது
**சிலுவையிது** – 3 சிலுவையை

அன்பினை வளர்க்கும் சிலுவையிது உன் பண்பினை உயர்த்திடும் சிலுவையிது
உண்மைக்குச் சான்றாம் சிலுவையிது பல தீமைக்கு மருந்தாம் சிலுவையிது..
**சிலுவையிது** – 3 சிலுவையை

00000000000000000000000000000000

இன்னுயிர் அகன்றது உமைவிட்டு – பூமி இருளினில் ஆழ்ந்தது ஒளிகெட்டு
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

**12ம் நிலை**



**இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

வியாழன் இரவு சிறைபிடிக்கப்பட்ட இயேசு அன்றிரவு பல்வேறு கொடுமைகளையும் அடி உதை மானபங்கம் என அவமானங்களைச் சந்தித்த இயேசு. பாரமான சிலுவையை நெடுந்தூரம் சுமந்தப்பின் அந்தச் சிலுவையோடு அறையப்பட்டார். வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு, **"எலோய் எலோய் லமா சபக்தானி"** அதாவது 'என் இறைவா என் இறைவா ஏன் என்னை கை நெகிழ்ந்தீர்?' என்று தந்தையை நோக்கித் தம் தாய்மொழியில் கூப்பிட்டு செபிக்கிறார் இயேசு.

தாய் மொழியில் இறைவனை வேண்டுவதற்கும் பயில்வதற்கும் உரிமை மறுக்கப்படும் இன்றைய கடினமான சூழலில், இயேசு தம் தாய்மொழியாகிய அராமியத்தில் செபித்தது, தாய்மொழியின் முக்கியத்துவத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. ஆங்கிலம் மட்டும் தங்கள் வாழ்வை உயர்த்தும், ஆங்கிலத்தில் பேசினால் தங்கள் அந்தஸ்து மேலுயர்ந்து உயர்ந்த சாதியினர் என்பதை மற்றவர்க்கு வெளிப்படுத்தும் என்று இருமாந்து தங்கள் தாயை தாய்மொழியை மறுதலிக்கும் எண்ணற்றவர்களுக்கு இயேசு தம் தாய்மொழியில் செபித்தது ஒரு நல்ல பாடமாக அமைகிறது. மேலும், ஆண்டவர் இயேசுவைப்போல் நாமும் மற்றவருக்காக உயிர்த் தியாகம் புரியும்போது நம் பிறப்பின் நோக்கத்தையும் பயனையும் அடைகிறோம்.

**செபம்**: இயேசுவே! உமது இறப்பு எங்கள் வாழ்வின் மறுபிறப்பு! உம்முடைய அந்த புனித வெள்ளி எங்கள் வாழ்வை புனித ஞாயிறாக மாற்றிவிட்டது. இதற்காக உம்மை வணங்குகிறோம் நன்றி செலுத்துகிறோம். இனி. எங்கள் உயிர் மூச்சு இருக்கும் வரை உம்மை பின்பற்றும் அருள்கொடையையும் நல்ல மரணத்தையும் தந்தருளும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

000000000000000000

துயருற்றுத் துடித்தாள் உளம் நொந்து – அன்னை உயிரற்ற உடலினை மடிசுமந்து
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

## 13 ஆம் நிலை



**அன்னை மரியாளின் மடியில் இயேசுவின் திருவுடல்**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

அன்று தன் மகன் இயேசுவை, சான்றோர் எனக் கேட்ட தாய் மரியாள் இப்போது அதே மகனை ஒரு சடலமாக தன் மடியில் கிடத்தி மீளாத் துயரில் ஆழ்ந்து கண்ணீர் வடிக்கிறாள். "ஒரு வாள் உன் உள்ளத்தை ஊடுருவும்" என்று 33 ஆண்டுகளுக்கு முன்பு குழந்தை இயேசுவை குறித்து சிமியோன் முன்னறிவித்தபடி மரியாளின் அன்பு நெஞ்சம் துன்பத்தை ஊடுறுவுகிறது.

தாய்மனம் துடிக்கிறது. கயவர்கள் தன் மகனை ஈனத்தனமாகக் கொன்றுவிட்டார்களே என்று ஒரு புறம் கண்ணீர் வடித்தாலும் நீதிக்காக குரல்கொடுத்தவர் என் மகன், அநியாய சட்டங்களை உடைத்தெறிந்து மனித நேயத்தைக் காத்தவர் என் மகன், சாதிக்கொடுமை, பெண்ணடிமை, வரட்டு வழிபாடு, மனித நேயமற்ற இறைவேண்டல், அதிகார வட்டத்தின் ஆணவம், தனிமனித ஒழுக்கச் சீர்கேடு, வன்முறையால் எழும் மானிட அழிவு, தன்னலம், போலி கௌரவம் போன்றவற்றிற்கெதிராக போராடி வெற்றிக்கண்டவர் என்று என்று உணர்ந்திருந்தாள் மரியாள். ஆம், தாய்க்கு ஏற்ற மகன், மகனுக்கு ஏற்ற தாய்.

தாயின் கருவறையில் உருவாகி கல்லறை வரை செல்லும் ஒவ்வொரு மகனும் மகளும் பெற்றோரை மதித்து வாழவேண்டும். அதேபோல் பணத்திற்கும் ஆங்கிலம் மற்றும் மேலைநாட்டு கல்வி கலாச்சாரத்திற்கும் தங்கள் பிள்ளைகளை பலியிடாமல் மனிதநேயத்திலும் தாய்மொழிப்பற்றிலும் பிறரன்பு சேவையிலும் திருச்சபைக் கலாச்சாரத்தைப் பின்பற்றி வளர்த்திடவேண்டும் என்ற நல்சிந்தனையை தருகிறது இந்த 13ஆம் நிலை.


**செபம்**: இறைவா, எங்கள் பிள்ளைகளுக்கு, தங்கள் தாயையும் தந்தையையும் போற்றி அவர்களின் சொற்படி கேட்டு நடக்கும் நல்லறிவையும் ஞானத்தையும் தந்தருளும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரம் சுவாமி-2**
**மரித்த ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் இளைப்பாறுதல் அடைவார்களாக. ஆமென்.**

0000000000000000000000

ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு – நீர் அடங்கிய கல்லறை உமதன்று
எனக்காக இறைவா எனக்காக **இடர்பட வந்தீர் எனக்காக – 2**

**14ஆம் நிலை**



**கல்லறையில் இயேசுவின் திருவுடல்**

**ஒரு**: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்
**எல்**: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

பிறக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒரு முடிவு உண்டு. மனிதராகட்டும் ஏனைய உயிரினங்களாகட்டும், அனைத்தும் ஒருநாள் மண்ணுக்குள் அடக்கம். ஆறிலும் சாவு நூறிலும் சாவு. பிறப்பு ஒருவழி இறப்போ பல வழி. ஆக வாழ்க்கை தத்துவம் இவ்வாறிருக்க, இங்கே மனிதவுருவெடுத்த இறைமகனும் இறந்து மண்ணுக்குள் அடக்கம் கொள்கிறார்.

'நரிகளுக்கு வலைகளுண்டு வானத்து பறவைகளுக்கு கூடுகளுண்டு ஆனால் மனுமகனுக்கோ தலைசாய்க்கக்கூட இடமில்லை' என்றாரே இயேசு **(லூக். 9:58)** அவர் சொன்னதுபோலவே தலைசாய்க்க, அவரது உடல் அடக்கம் கொள்ள அவருக்கென்று ஒரு கல்லறையும் இருக்கவில்லை. மாறாக அரிமத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்பு என்பவரின் கல்லறையில் துயில்கொள்கிறார்.

அன்பர்களே, இங்கு வாழும்போதே மனிதன் மண்ணுக்குள் கல்லறை தேடுகிறான் ஆனால் ஆண்டவரை தேடுவதில்லை, அப்படியே தேடினாலும் வெற்றுக்கல்லறைக்குள் கடவுளை தேடுகிறான். மண்ணுக்குள் மறைந்துபோகும் பொன்னைத் தேடுகிறான் ஆனால் பொன்னைப் படைத்த ஆண்டவர் வழங்கும் மனஅமைதியை தேடுவதில்லை. குடும்ப சமாதானத்தைத் தேடி அற்றுப்போகும் சீர்கெட்ட உறவுகளை நாடுகிறான் ஆனால் நிரந்தர உறவை நல்கும் பிறரன்புப் பணியை நாடுவதில்லை. வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்குச் சமமான, கைசோதிடம் கிளி சோதிடம் காற்று கருப்பு மாயமந்திரம் நல்லகாலம் கெட்ட காலம் சாத்தான் வழிபாடு என மூடநம்பிக்கைகளை நம்புகிறான், ஆனால் விண்ணும் மண்ணும் ஒழிந்துபோனாலும் என் வார்த்தையோ ஒழியாது என்ற ஆண்டவரின் வார்த்தையை, வானினின்று இறங்கிவந்த இயேசுவின் நற்கருணையை, பாவத்தை மன்னித்து விடுதலை வழங்கும் பாவஅறிக்கையை நம்புவதில்லை, பிறப்பு முதல் இறப்புவரை கூடவே நிழல்போல் தொடர்ந்து ஆசீர் வழங்கும் குருத்துவத்தையும் திருச்சபையையும் நம்புவதில்லை.

எனவே மரியாளின் கருவறையிலிருந்து மண்ணின் கருவறை வரைக்கும் இயேசு ஒரு சகாப்தமாக திகழ்ந்ததுபோல நாமும் அவர்போல அவரை பின்பற்றி அவர் வழியாக அவரில் அவராக மாறி வரலாறு படைப்போம். ஏனெனில் இயேசுவின் கல்லறை தோட்டத்திலிருந்து மலரப்போகிறது உயிர்ப்பு என்ற மலர். அந்த மலரின் வாசத்தை நாமும் நிறைவாக நுகர்வது திண்ணம். இவ்வையத்துள் வாழ்வாரே வாழ்வார் வானுறை தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற வள்ளுவத்தின் அடிப்படையில் இயேசுவை பின்பற்றினால் நாமும் அவரோடு உயிர்ப்போம்.

**செபம்:** கல்லறைகளுக்கெல்லாம் உயிர்கொடுக்கும் இறைமகனே, உம்மில் நாங்கள் நிலைகொண்டு உமது கல்லறையோடு ஐக்கியம் கொண்டு எங்கள் கல்லறைக்கு மாண்பு உண்டாகும் வாழ்வினை வாழும் ஆசீர் தாரும்.ஆமென்

000000000000000000000000

## முடிவுரை

ஒரு மனிதனின் அழிவில் சுகம் கண்டது யூத மதத் தலைமை. அதே யூத இன அழிவில் தன் கொலைவெறியைத் தீர்த்துக்கொண்டான் இட்லர். அவன்வழியை பின்பற்றி இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்களைக் கொன்று தன் கொலைவெறியைத் தீர்த்துக்கொண்டான் இராஜபக்ஷே. அக்கால யூத தலைமையை இக்கால இட்லரையும் இராஜபக்ஷேவையும் நம் நடுவில் அன்றாடம் காண்கிறோம். ஒரு சக மனிதரின் ஒரு மொழியின் ஓரினத்தின் அழிவை தங்கள் இலட்சியமாக எண்ணி நடமாடிக்கொண்டிருக்கும் மானிடப் புல்லுருவிகள் எல்லாம் அழிவதைவிட மனமாறவேண்டும் என்பதே இயேசுவின் இலட்சியக்கனவு. ஒரு குருவி இன்னொரு குருவியை அழிக்கிறது, ஒரு விலங்கு இன்னொரு விலங்கை அழிக்கிறது. இது இயற்கை. இச்சையினால் இனப்பெருக்கமும் அழிவும் இயற்கையில் விளையும் சுற்றோட்டம். ஆனால் அன்பினாலும் பண்பினாலும் மனித உரிமையினாலும் உறவினாலும் பகுத்தறிவினாலும் பகிர்வினாலும் மானிடம் தழைக்கவேண்டும்மென்பது இறைவன் நமக்குத் தந்த நியதி.. இதற்காகவே ஆண்டவர் மானிடனாகப் பிறந்து பாடுகளை அனுபவித்து மரித்து உயிர்த்தார். ஆக மனிதன், பண்புள்ள மனிதனாக வாழ அழைக்கின்றார்.

ஆண்டவர் வெறும் ஆன்மீகத்தை மட்டும் போதிக்கவில்லை. மாறாக, சமுதாய மாற்றத்திற்காகப் போராடினார். சீரான தனிமனித மற்றும் சமுதாய மாற்றத்தில் மட்டும் ஆன்மீக புரட்சி கண்டவர் இயேசு. இசுராயேல் மக்களின் மீட்புக்காக, மாற்றத்திற்காக மட்டும் ஆண்டவர் தம்மையே அர்ப்பணித்துக்கொள்ளவில்லை மாறாக அராஜகமும் வன்முறையும் தன்னலமும் பிராந்திய வெறி, கொலைவெறி, மொழிவெறி, இனவெறி, மதவெறி போன்ற காட்டேறித்தனம் எங்கெல்லாம் தலைவிரித்தாடுகிறதோ அங்கெல்லாம் ஆண்டவர் மனித நேயம் மற்றும் மனித மாண்பும் கட்டிக்காக்கத் தம்மையே சிலுவையில் உயிர்த்தியாகம் செய்து ஒரு மாபெரும் சகாப்தத்தை உருவாக்கினார்.

குடும்பத்தில் அமைதி தேடும் ஒவ்வொருவருக்கும் இயேசு ஒரு குடும்ப சகாப்தம். கடமையாற்றும் பணியாளர் ஒவ்வவொருவருக்கும் இயேசு ஒரு சமுதாய சகாப்தம். மாந்தர் சேவையில் ஈடுபடும் அனைவருக்கும் இயேசு ஒரு ஆன்மீக சகாப்தம். அவ்வாறே அவர் வழியில் நடக்கும் ஒவ்வொருவரும் இம்மண்ணில் ஒரு சகாப்தமாக மாறலாம். அவர் செய்த எல்லா சகாப்தங்களும் அவர் கல்லறை திறக்கும்போது எழுதப்படுகிறது. நாம் அவரின் உயிர்ப்பில் விசுவாசம் வைத்து சவால்களை சந்திக்கும்போது நம் சகாப்தம் தோன்றுகிறது. இனி இயேசுவின் உயிர்ப்புவிழா கொண்டாடும்வரை தனிமனித மாற்றித்திற்கு வழிவிட்டு சமுதாய மாற்றத்திற்கு வித்திடுவோம். இப்பணியில் நம் அருள்நாதர் இயேசு துணை வருவாராக! ஆமென்.

0000000000000000000

**பொறுத்தருளும் எம் தந்தாய் உமது மக்களின் பாவங்களை,**
**என்றென்றைக்கும் எங்கள் மேல் கோபமாயிராதேயும் சுவாமி – 3**

**0000000000000000**

**ஆணிகொண்ட உம் காயங்களை**

ஆணிகொண்ட உம் காயங்களை
அன்புடன் முத்தி செய்கின்றேன்,
பாவத்தால் உம்மை கொன்றேனே
ஆயனே என்னை மன்னியும் - 2

1. வலது கரத்தின் காயமே
   அழகு நிறைந்த இரத்தினமே
   அன்புடன் முத்தி செய்கின்றேன்

2. இடது கரத்தின் காயமே
   கடவுளின் திரு அன்புருவே
   அன்புடன் முத்தி செய்கின்றேன்

3. இடது பாதக் காயமே
   மிகத் தரும் நற்கனியே
   அன்புடன் முத்தி செய்கின்றேன்

4. இடது பாதக் காயமே
   திடம் மிகத்தரும் தேனமுதே
   அன்புடன் முத்தி செய்கின்றேன்

00000000000000

**வியாகுல மாமரியே தியாகத்தின் மாதாவே சிலுவையினிலே சிந்தை நொந்தழுதாயோ**

பன்னிரு வயதினில் ஆலயத்தில் அன்று அறிஞர்கள் புகழ்ந்தனரே
கரங்களை விரித்து கள்வனைப்போல் கழுமரத்தினில் கண்டதினால்

கண்ணீரை சிந்திய மனிதருக்கு அருள் பண்ணிய திருமகனை
மண்ணவர்க்காக தன்னுயிரை இன்று மாய்த்திட கண்டதினால்

000000000000000

**மனமே மனமே**

மனமே மனமே இறைவனைப் பாரு
செந்நீர் சிந்தி சிலுவையை சுமக்கும் காரணம் நீ கேளு

மண்ணைப் படைத்தவர் மகிழ்ந்து காப்பவர் மரணதுயர் பாரு –
விண்ணைப் படைத்தவர் விண்மீன் தெளித்தவர் வீழும் நிலைப் பாரு
நம்மைக் காத்திட தன்னைத் தந்தவர் தரணி வாழ்ந்திட தரையில் வீழ்ந்தவர்
**மனிதா மனிதா நீயே காரணம் கண்ணீர் சிந்துவாய்**

முள்ளில் மணிமுடி மாளா கசையடி மாந்தர் வசைமொழி
பாவி மனிதரின் பாரச்சிலுவையை சுமந்துபோகின்றார்
கொடிய பாதையில் குருதி சிந்திட துவண்டு வீழ்கிறார் எழுந்துபோகின்றார்
**மனிதா மனிதா நீரே காரணம் கண்ணீர் சிந்துவாய்**

**000000000000**

**மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய்**

மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய்
மண்ணுக்குத் திரும்புவாய் மறவாதே என்றும்
மறவாதே மறவாதே மனிதனே

பூவும் புல்லும்போல் புவியில் வாழ்கிறாய் - 2
பூவும் உதிர்ந்திடும் புல்லும் உதிர்ந்திடும்

மரணம் வருவதை மனிதன் அறிவாயோ – 2
தருணம் இதுவென இறைவன் அழைப்பானோ

இறைவன் இயேசுவோ இறப்பைக் கடந்தவர் - 2
அவரில் வாழ்பவன் இறந்தும் வாழ்கிறான்
00000000000000

**பாடுகள் நீர் பட்டபோது**

பாடுகள் நீர் பட்டபோது பாய்ந்து ஓடிய இரத்தம் கோடி பாவம் தீர்ந்து மோட்சம் கொள்ளுவிக்க வல்லதே

கெட்டுப்போனோம் பாவியானோம் கிருபை செய் நாதனே! மட்டில்லா கருணை என்மேல் வைத்திரங்கும் இயேசுவே – கெட்டுப்......

துஷ்ட யூதர் தூணினோடு தூய கைகள் கட்டியே கஷ்டமாய் அடித்தபோது பாய்ந்த செந்நீர் எம் துணை - கெட்டுப்....
000000000000000

**பல்லவி:**
தெளிந்த நீரோடையில் கறைகள் தெரிவதுபோல்
சிலுவையின் நிழலினிலே **என் குறைகள் தெரிகின்றன.2**

**அனுபல்லவி:**
ஆண்டவரே நான் அழுகிறேன்
பாவத்தை நினைந்து வருந்துகின்றேன்
**மன்னித்து ஏற்பாய் இறைவா-2**

நாவிருந்தும் நல் வார்த்தைப் பேசவில்லை
விழியிருந்தும் நான் தூயதைப் பார்க்கவில்லை
**காலிருந்தும் நான் பிறரை நாடவில்லை - 2**
கரமிருந்தும் நான் உதவி புரியவில்லை

பாவம் செய்தேன் நான் பரிதவித்தேன் இறைவா
பட்டதுபோதுமென்று பிழை உணர்ந்தேன் தலைவா
**நாவினில் மட்டும் உனைத் தொழுதேன் இறைவா - 2**
நேரிய வழியில் உனைக் காண்பேன் தலைவா

(பண்-பாடல்: தந்தை ஜெ.ஆரோக்கியநாதன்
**செல்லமே என் சொந்தமே** குறுந்தகடிலிருந்து)

000000000000

**உயிர்த்தெழுந்தார் இயேசு உயிர்த்தெழுந்தார்**

**பல்லவி**: உயிர்த்தெழுந்தார் இயேசு உயிர்த்தெழுந்தார்
சாவை வென்று உயிர்த்தெழுந்தார்
பாவத்தை அழிக்க சாத்தானை ஒழிக்க மகிமையின் தேவன் உயிர்த்தெழுந்தார்

**அனுபல்லவி**: மகிமையும் புகழும் இயேசுவுக்கே மகிழ்ச்சியும் வாழ்வும் மனிதருக்கே
அல்லேலூயா ஆமென் ஆமென் அல்லேலூயா அல்லேலூயா ஆமென்

1.
அறியாமை நீங்கிட உயிர்த்தெழுந்தார் ஆணவம் மறைந்திட உயிர்த்தெழுந்தார் - 2
அமைதி மலர்ந்திட உயிர்த்தெழுந்தார் அன்பு நிறைந்திட உயிர்த்தெழுந்தார்
மகிமையும் புகழும் இயேசுவுக்கே..........

2.
மறைநூல் நிறைவேறிட உயிர்த்தெழுந்தார் மானிடர் நம்பிட உயிர்த்தெழுந்தார் - 2
இம்மையோர் ஒளிபெற உயிர்த்தெழுந்தார் இறப்போர் உயிர்பெற உயிர்த்தெழுந்தார்
மகிமையும் புகழும் இயேசுவுக்கே.......

(பண்-பாடல்: தந்தை ஜெ.ஆரோக்கியநாதன்
**செல்லமே என் சொந்தமே** குறுந்தகடிலிருந்து)
000000000000000000




இயேசு உயிர்த்துவிட்டார் அல்லேலூயா!

**கிடைக்குமிடங்கள்: பெங்களூர் உயர்மறைமாவட்ட திருத்தலங்களில், முக்கிய கிறிஸ்தவ வணிகக் கூடங்களில் மற்றும் தமிழகத் திருத்தலங்களில்**

**தொடர்புக்கு: தூய பேதுரு ஆலயம், மணிப்பால் மருத்துவமனை பின்னால், ருஸ்தும்பாக், பழைய விமானத்தளச் சாலை, பெங்களூரு – 560017 இந்தியா**

**கைபேசி: 09740203056 மின்னஞ்சல்: nathanvatican@yahoo.com**



பெங்களுர் உயர்மறைமாவட்டத்தைச் சார்ந்த அருள் தந்தை ஜெ.ஆரோக்கியநாதன், கோலார் தங்கவயலில் பிறந்து வளர்ந்தவர். உயிரினும் மேலான தன் தாய்மொழி தமிழை நன்கு கற்றுவர். ஆங்கிலத்திலும் புலமைபெற்ற இவர் கன்னடம், இத்தாலியம் நன்றாக எழுத பேச படிக்கக்கூடியவர். மலையாளமும் தெலுங்கும் இந்தியும் ஓரளவு பேசவல்லவர். எழுத்து இயல், சமூகவியல் ஆகிய படிப்புகளில் முதுகலைப் பயின்று, கல்வியியலில் இளங்கலை முடித்து, உரோம் வத்திக்கான் வானொலியில் 5 ஆண்டுகள் தமிழ் ஒலிபரப்பாளராகச் சிறப்புடன் பணியாற்றி, தற்பொழுது சிறந்த இறைபணியாற்றி வருகிறார். 'தி கீ' (திறவுகோல்) என்ற ஆங்கில மாத இதழின் ஆசிரியராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

"வாழ்க்கையில் சறுக்கல்கள் இருந்தால் தான் அது சுவாரசியமான வாழ்க்கை.
இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் சறுக்கல்கள், இடையூறுகள், சிலுவை மரணம் என்று இருந்தபடியினால் தான் அவர் ஒரு வரலாற்றினை படைக்கமுடிந்தது.
அவருக்கு ஏற்பட்ட சறுக்கல்கள் அவரால் வந்தவவையல்ல. மற்றவரால் வந்தவை.
நமக்கு ஏற்படும் சறுக்கல்கள் சரிவுகள் நம் ஆணவத்தால் இச்சைகளினால் தன்னலத்தால் பல்வேறு வெறிததனங்களால் மற்றவரின் கோபத்தால் வருபவை.
இயேசு தம் சறுக்கல்களை தாழ்ச்சியினாலும் பொறுமையினாலும் உறுதியான விசுவாசபிடிப்பினாலும் இறுதியாக தம் உயிர்ப்பினாலும் வெற்றிக்கொண்டார். சரித்திரம் படைத்தார்.
நாமும் நம் சறுக்கல்களை வெற்றிக்கொண்டு மேலெழுந்து பிறர் வாழ்வில் நம் வாழ்வில் ஒளியேற்றுவோம்..... "

**"எலோய் எலோய் லமா சபத்தானி**.... என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்?... இது இயேசுவின் தாய்மொழியாம் அரமியத்தில் அவர் செய்த மன்றாட்டு... தாய்மொழி பற்றிருந்தால் உன் இறைவனிடத்தில் உளம் சார்ந்த மன்றாட்டினை நீங்கள் எளிதாய் செய்யமுடியும்.
ஆம், உங்கள் தாய் மொழி தமிழைக் கற்றுக்கொள்ளுங்கள் மற்றவருக்கும் கற்றுக்கொடுங்கள்... தாய்மொழியில் மன்றாடுங்கள்...... கிறிஸ்துவின் ஒளி உலகெங்கும் பரவுவதுபோல் தமிழ்மணம் கமழட்டும்..." **அருள் தந்தை ஜெ.ஆரோக்கியநாதன்.**

For Contact: Rev.Fr.J.Arokianathan
(Ex-Radio Vatican Tamil Broadcaster, Rome)
Parish priest, St.Peter's Church
Rustambagh, Behind Manipal Hospital, Old Airport Road, Bangalore – 560 017 India
Tel: 080-2526 4343, Mob: 09740203056 Email: nathanvatican@yahoo.com